# இனவாதத்தை முக்கிய பிரச்சினையாகக் கருதும் மக்கள்

***Tamil Murasu,*** 4 April 2022

சிங்கப்பூர் குடியிருப்பாளர்கள் பெரும்பாலோர், இனவாதத்தைக் காட்டும் போக்கு இன்றும் முக்கியமான பிரச்சினையாக இருப்பதாகக் கருதுகின்றனர் என்று அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஒரு கருத்தாய்வின் முடிவுகள் தெரிவித்துள்ளன. குறிப்பாக அதிகம் படித்த இளம் வயதினரிடையே இந்தக் கருத்து இருப்பதாக அந்த ஆய்வின் மூலம் தெரியவந்துள்ளது.

இனவாதத்தைக் காட்டும் போக்கு தொடர்ந்து முக்கியப் பிரச்சினையாக இருப்பதாகக் கருத்தாய்வில் பங்கேற்றோரில் 56.2 விழுக்காட்டினர் கூறினர். இதே கருத்தாய்வு 2016ஆம் ஆண்டு நடத்தப்பட்டபோது 46.3 விழுக்காட்டினர் மட்டுமே இவ்வாறு கூறினர்.

‘சிஎன்ஏ’யும் கொள்கை ஆய்வுக் கழகமும் இணைந்து நடத்திய கருத்தாய்வில் இந்த விவரங்கள் தெரியவந்துள்ளன.

இதன் முடிவுகள் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டன.

நவம்பர் 2021க்கும் ஜனவரி 2022க்கும் இடையே 21 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட 2,000 சிங்கப்பூர் குடியிருப்பாளர்கள் இந்த கருத்தாய்வில் பங்கேற்றனர். சிறுபான்மையினர் நன்கு பிரதிநிதிக்கப்படுவதை உறுதிசெய்வதற்காக, மலாய் மற்றும் இந்தியர்களின் தேசிய விகிதாச்சாரத்தில் இரண்டு மடங்கு அதிகமானோர் கருத்தாய்வில் உட்படுத்தப்பட்டனர்.

கடந்த ஐந்தாண்டுகளில் கூடுதலான பங்கேற்பாளர்கள் சீனர் அல்லாத ஒருவர் பிரதமராகவோ அதிபராகவோ பதவி வகிப்பதை வரவேற்பதாகவும் கருத்தாய்வில் தெரியவந்தது. சிங்கப்பூரைச் சேர்ந்த மலாய் இனத்தவர் ஒருவர் அதிபராகப் பதவி வகிப்பதை 82.2 விழுக்காடு பங்கேற்பாளர்கள் வரவேற்கின்றனர். 2016ஆம் ஆண்டு இந்த விகிதம் 65.5 விழுக்காடாக இருந்தது.

82 விழுக்காடு பங்கேற்பாளர்கள், சிங்கப்பூரைச் சேர்ந்த இந்தியர் ஒருவர் அதிபராகப் பதவி வகிப்பதை வரவேற்கின்றனர். 2016ஆம் ஆண்டு இந்த விகிதம் 70.6 விழுக்காடாகப் பதிவானது.

சிங்கப்பூரின் நிலவரம் பெரும்பான்மை இனத்தவருக்குச் சாதகமாக இருப்பதாக 53.9 விழுக்காட்டு பங்கேற்பாளர்கள் கருதுகின்றனர்.

எனினும், வேலையிடங்களில் சிங்கப்பூரைச் சேர்ந்த சீன, மலாய், இந்திய இனத்தவர் சக ஊழியர்களாக இருப்பதைப் பொதுவாக பங்கேற்பாளர்கள் விரும்புவது கருத்தாய்வில் தெரியவந்தது.